பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 07 | வெள்ளிக்கிழமை | 24.11.2023 | அதிர்வு 115

**சீரற்ற காலநிலையால்**

## நால்வர் பரிதாபச் சாவு 662 பேர் இடம்பெயர்வு!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த இரு நாள்களில் 198 குடும்பங்களைச் சேர்ந்த 662 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அத்துடன், மண்சரிவு மற்றும் 06

# மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்குவது கோழைத்தனமாம் பிரபாகரனுடன் கூட்டமைப்பையும் அழித்திருக்க வேண்டுமாம்

## சரத் வீரசேகரவின் வியாக்கியானம் இது



"உலகத்தில் மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை அழித்துள்ளோம். இந்நிலையில், மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல, அது கோழைத்தனம்."

இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார். (விரிவான செய்தி 2ஆம் பார்க்க...)



# அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்யவுள்ளோம்!

## நாடாளுமன்றில் ஜனாதிபதி உறுதி

"காஸா பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லாமையே காரணமாகும். அதனால் அங்கு அரசியல் தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இலங்கையிலும் வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்யவுள்ளோம்." 06

## பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றம்

2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் இரண்டாவது நாளான நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு அமைச்சுக்கான செலவுத் தலைப்பு (103) 68 மேலதிக வாக்குகளால் 06

# சரத் வீரசேகரவின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



"யுத்தம்நிறைவடைந்து14ஆண்டுகள்கடந்துள்ளநிலையிலும் நாட்டில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பு உறுப்பினரின் (சரத் வீரசேகரவின்) மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

(விரிவான செய்தி 8ஆம் பக்கத்தில்)

# கொக்குத்தொடுவாய் புதைகுழியில் நேற்றும் மனித எலும்புக்கூடுகள் மீட்பு

## இன்று விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனை






(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்றும் அகழ்வுப் பணி தொடர்ந்து நடைபெற்றது.

நேற்று மூன்று மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும், இரண்டு மனித எலும்புக்கூடுகள் 06

# விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைத் தேடி முள்ளிவாய்க்காலில் தோண்டும் நடவடிக்கை




(சண்முகம் தவசீலன்)

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் மேற்கில் உள்ள கடற்கரைப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆயுத உபகரணங்கள் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடம் ஒன்றை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை நேற்றுக் காலை 02




சில விடயங்களை கையாள்வதில் அவதானம் அவசியமாக இருக்க வேண்டும்.

நாம் தாக்கப் பயன்படுத்தும் ஆயுதமே பூமராங்காக திரும்பி வந்து நம்மைத் தாக்கி விடும். அதனால்தான் அவதானம் அவசியம் என்றேன்.

இலங்கையை வங்குரோத்தாக்கிய நபர்களின் குடியுரிமையை இரத்துச் செய்யுமாறு கோரியும், அவர்களுக்கு இனி மேலும் அரச ஆதரவின் கீழ் 06

# மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்குவது கோழைத்தனமாம்

## சரத் வீரசேகரவின் வியாக்கியானம் இது



**“உலகத்தில் மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை அழித்துள்ளோம். இலங்கையிலிருந்து புலிகள் அமைப்பை அழிந்திருந்தாலும், புலிகளின் கொள்கையுடைவர்கள் சர்வதேச மட்டத்தில் இன்றும் துடிப்புடன் உள்ளார்கள் செயற்படுகின்றார்கள். இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளார்களா என்பதை ஆராய வேண்டும். மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல, அது கோழைத்தனம்.”**

**- இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர எம்.பி. தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

“பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும். ஆனால், இன்று அவருக்கு அரசமைப்புப் பேரவையால் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால்தான் நான் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கும், 21 ஆவது திருத்தத்துக்கும் எதிராக வாக்களித்தேன்.

உலகத்தில் மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்துள்ளோம். இலங்கையில் புலிகள் அமைப்பை அழிந்திருந்தாலும் புலிகளின் கொள்கையுடைவர்கள் சர்வதேச மட்டத்தில் துடிப்புடன் உள்ளார்கள் செயற்டுகின்றார்கள். இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளார்களா என்பதை ஆராய வேண்டும்.

யுத்தத்தை வெற்றிக் கொண்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஆஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் விசா வழங்குவதில்லை. இராணுவ அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. இந்நிலை தற்போதை இராணுவ அதிகாரிகளுக்கும் சேவை ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜெனிவா விவகாரத்தில் இலங்கை தவறிழைத்துள்ளது. 2009.01.19 ஆம் திகதி யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து 2009.05.27 ஆம் திகதி ஜேர்மனி உட்பட 17 நாடுகள் ஒன்றிணைந்து இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தன. யுத்தம் முடிவடைந்தன் பின்னர் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் நாயகம் பாங்கி மூன் பல பரிந்துரைகளை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தருஸ்மன் அறிக்கை சமர்ப்பிக்கப்படப்பட்டது. அதில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனப் பொய்யான தரப்படுத்தல் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கைக்கு முரணாக பரணகம குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லாட்சி அரசு 30/1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியது. யுத்த காலத்தில் இடம்பெற்ற யாதார்த்த உண்மைகள் ஜெனிவாவுக்குக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இனியாவது இந்த தவறைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

மாவீரர் தினம் பற்றி தற்போது பேசப்படுகின்றது. நாட்டைப் பிளவுப்படுத்த ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை நினைவுகூர்வதற்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல, அது கோழைத்தனமானது என்பதை பகிரங்கமாகக் குறிப்பிடுவேன்.

மாவீரர் தினம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், ஏனைய தமிழ் அரசியல் தரப்பினரும் முயற்சிக்கின்றார்கள். விடுதலைப்புலிகள் தமிழர்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்கு சென்றார்கள்? 2 இலட்சத்து 95 ஆயிரம் பேரை இராணுவத்தினர் மீள்குடியேற்றம் செய்தார்கள். 8 ஆயிரம் தமிழர்களுக்கு இராணுவத்தினர் தமது சொந்த நிதியில் வீடு கட்டிக் கொடுத்தார்கள். அப்போது கூட்டமைப்பினர் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசிக் கொண்டு வரவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது. கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து பதவி பிரமாணம் செய்வதற்கு முன்னர் பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாரிய தவறிழைத்துள்ளார். ஹிட்லர், முசோலினி, சதாம் ஹுசைன் ஆகியோர் அழிக்கப்பட்டதன் பின்னர் அவர்களின் அரசியல் செயற்பாடுகள், அரசியல் கட்சிகள் அழிக்கப்பட்டன. அதேபோல் பிரபாகரனை அழித்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழித்திருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் அனுதாபம் இன்று பூகம்பமாக மாற்றமடைந்துள்ளது.” – என்றார்.

## விடுதலைப் புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்கப்பட்ட நிலையில் மாலை 3 மணியளவில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் இன்று காலை முதல் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட புலனாய்வாளர்களுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய ஆயுதங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களை விடுதலைப்புலிகள் புதைத்து வைத்தனர் என்று நம்பப்படும் இடத்தில் தோண்டுவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி வழக்குத் தொடரப்பட்டு நீதிபதியின் அனுமதி பெறப்பட்டிருந்தது.

அதற்கமைய முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதாரப் பிரிவினர், தடயவியல் பொலிஸார் ஆகியோரின் பிரசன்னத்துடன் நேற்று தோண்டும் பணி ஆரம்பமாகியது.

குறித்த பகுதியில் கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்ட போது நிலத்திலிருந்து நீர் வந்திருந்தது.

ஆனால், நேற்றைய தோண்டும் பணியின்போது எந்தவொரு பொருட்களும் மீட்கப்படாத நிலையில் இன்று காலை 9 மணியளவில் மீண்டும் இரண்டாவது நாளாகப் பெரிய கனரக இயந்திரம் கொண்டு தோண்டும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| | | |
|---|---|---|
| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகோள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

# யுத்தம் இல்லாத சூழலில் பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி எதற்கு?



## சபையில் கஜேந்திரகுமார் சீற்றம்

**போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் - யுத்தம் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது என்றால் அதைப் பற்றியும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

“மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் காசாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல் தொடர்பாக இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக இதே நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் ஒரு போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும், பலஸ்தீன மக்களுடைய பிரச்சினை பேச்சு ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டது.

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களோடு ஐ.நா.வுடைய செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் ஒன்று எழுதப்பட்டது. அந்தக் கடிதத்திலும் இங்கு நடைபெற்ற விவாதத்திலும் மிகத் தெளிவாக காஸாவில் நடைபெறுவது பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை என்ற விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது. அங்கு நடைபெறுவது இனப்படுகொலை என்பதை நியாயப்படுத்துவதற்குரிய பல அம்சங்கள் பட்டியிலிடப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கையில் வடக்கு, கிழக்கில் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தவையாகும்.

இங்கு இனப்படுகொலையை செய்வித்த கருவி இந்த முப்படைகளும் பொலிசும் ஆகும். இதனைப் பற்றித் தான் இன்று விவாதிக்கின்றோம். அந்த இனப்படுகொலை செய்தவர்கள் இன்று வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 1:14 என்றும், வன்னியில் 1:4 ஆக, மிகவும் ஒரு நெருக்கடியைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஆயதப்படைகளின் பிரசன்னம் இருக்கக்கூடிய நிலையில், எங்களைக் கொலை செய்தவர்களே எங்களுக்கு அருகில் இருப்பதை எம்மால் அனுமதிக்க முடியாதுள்ளது.

ஆகவே தான் – இந்த இனப்படுகொலை தொடர்பாக முழுமையான பொறுப்புக்கூறல் நடைபெற்று, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுகின்ற வரைக்கும் இராணுவத்தை வடக்கு கிழக்கில் இருந்து அகற்ற வேண்டும் என்ற விடயத்தை, அரச தரப்பில் ஒட்டுண்ணிகளாக இருக்கக்கூடிய தமிழ் உறுப்பினர்களைத் தவிர்ந்த மற்றய அனைத்து தரப்பினரும் கோரிக்கையாக முன்வைத்து வருகின்றனர். இதிலுள்ள யாதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் – போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் – யுத்தம் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது என்றால் அதைப்பற்றியும் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இன்று இலங்கை வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற சூழலிலே – மொத்த வரவு – செலவுத் திட்டத்தில் 11 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகின்றது. அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்புக்கு 3.6 வீதமுமாக 14.6 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகின்றது. சுகாதாரத்துகு 10.6 வீதம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்கு 6.1 வீதம். வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியையும் அதிகரிக்க வேண்டும். உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிப்பதற்குரிய மிக முக்கியமானது கைத்தொழில், விவசாயம், மீன்பிடி என்பவையாகும்.

கைத்தொழிலுக்கு 0.2 வீதமும், விவசாயத்துக்கு 2.6 வீதமும், மீன்பிடிக்கு 0.18 வீதமும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒரு தீவு. தீவை சுற்றிவர மீன்பிடி செய்யக்கூடிய நிலையிருந்தும் கூட, இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவருவதற்கு 0.18 வீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு தூரம் நெருக்கடிகள் இருக்கும் போது பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்படுவதற்கு காரணம் என்ன? யுத்தம் இன்று இல்லை. இங்கிருக்கக்கூடிய எவரும் நாட்டைப் பிரிப்பதற்கு கோரவுமில்லை. கோரவும் முடியாது. அப்படியானால் என்ன காரணம்?

காரணமென்னவெனில் – நீங்கள் தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கத் தயாரில்லை என்றால் – தொடர்ந்தும் தமிழ் மக்களது உரிமைகளைப் பறித்து வைத்திருக்கப் போகிறீர்களாக இருந்தால் – தமிழ் மக்கள் கொந்தளிப்பார்கள் என்ற பயத்திலே அந்த மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்க வேண்டிய தேவை உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே யுத்தம் முடிந்து 15 வருடங்களுக்குப் பிறகும் நீங்கள் இந்த செயற்பாட்டை தொடர்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல் இந்த மக்களை எவ்வளவுக்கு நசுக்க முடியுமோ, அவர்களை நசுக்கி, இந்த மக்கள் இந்த தீவை விட்டு வெளியேறுகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கும் தான் நீங்கள் சிந்திக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் பொருளாதாரம் 30 வருடங்களுக்கு மேல் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற நிலையிலும், அந்த மக்களுடைய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு போர் முடிந்து 15 வருடங்களாகியும் நீங்கள் எதுவுமே செய்யவில்லை. எதுவுமே செய்யாதது மட்டுமல்லாமல், தமிழ் மக்களை மோசமான நிலமைக்குத் தள்ளி அவர்கள் உங்களைக் கெஞ்சுகின்ற நிலைமையை உருவாக்கி, அந்த மக்கள் உரிமைகளைப் பற்றி சிந்திக்காமல் இருப்பதற்காக அவர்களை வறுமையாளர்களாக உருவாக்கி – இராணுவமயமாக்கலுக்குள் உள்வாங்கி, தமிழ்மக்களை முழுமையாக அடிமைகளாக்கி வைத்திருக்கின்ற நிலையையே உருவாக்க முயல்கிறீர்கள்.

இன்று வேலைவாய்ப்புக்கள் இல்லை. மக்கள் சீவிப்பதற்கு வழியில்லாத நிலையை ஏற்படுத்தி, இராணுவத்தின் மூலமாக கொடுப்பனவுகளை வழங்கி உள்வாங்கப்படுகிறார்கள். உதாரணமாக – இன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிஎஸ்டி தரப்பு முப்பதாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குகின்றது. ஆனால் கல்வியமைச்சுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறாயிரம் மட்டுமே வழங்கப்படுகின்றது. இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியில் முப்பதாயிரத்தை மக்கள் விரும்புவார்களா? அல்லது ஆறாயிரத்தை மக்கள் விரும்புவார்களா? நீங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு தூரம் பணம் ஒதுக்குவதே அந்த மக்களை இந்தப் பாதுகாப்பு அமைச்சுக்குள் உள்வாங்கி, அவர்களை உங்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்தி, அடிமைகளாக்கி, அவர்களை உரிமைசார் பயணங்களில் ஈடுபடமுடியாதவாறு ஆக்கி, உங்களது எடுபிடிகளாகப் பாவிப்பதற்கு திட்டமிட்டு செயற்படுகிறீகள்.

அதேநேரம் – இந்த மக்கள் இலங்கைத் தீவிலிருந்து வெளியேறக் கூடிய நிலையை இன்னொரு வகையில் உருவாக்குகிறீர்கள். கடற்படையை எடுத்துக்கொண்டால் – வடக்கு கிழக்கில் இரண்டு மூன்று கிலோமீற்றர்களுக்கு ஒரு கடற்படை முகாம் இருக்கிறது. ஆனால் – இவ்வளவு பாரிய இருப்பை கடற்படை வைத்திருந்தும் கூட வெளிநாட்டிலிருந்து வடக்கு, கிழக்கு கடற்பரப்புக்குள் நுழைந்து, ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வந்து கடற்தொழில் செய்து, இங்குள்ள தமிழர்களின் சொத்துக்களை அழித்துவிட்டு செல்வதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள். ஆயிரக்கணக்கில் அவர்கள் வந்து அழிவுகளைச் செய்துகொண்டிருக்கின்ற நிலையில் – மாதத்தில் ஐந்து படகுகளை மட்டும் கடமைக்காக பிடித்து விட்டு பின்னர் விட்டுவிடுகிறீர்கள். இது திட்டமிட்டே நடைபெறுகிறது. இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாங்கள் கேட்டிருந்தோம். அந்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இலங்கையின் மீன்பிடி அமைச்சர் . அங்கு கடற்படையின் பொறுப்பதிகாரியும் வந்திருந்தார். இந்த நிலமையைக் கேட்டபோது – கடற்படைக்கு அவர்களுக்கு கிட்டப் போய் பிடிப்பதற்கு பயம். அந்தளவுக்கு எண்ணிக்கையில் கூடிய ஆட்களாக வெளியாட்கள் வருகிறார்கள் என்று மீன்பிடி அமைச்சர் கடற்படை அதிகாரியின் கருத்தாக கூறுகிறார்.

இது நம்பக்கூடிய கதையா? உண்மையில் பயமென்றால் நீங்கள் ஏன் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து, மூன்று கிலோ மீற்றருக்கு ஒரு கடற்படை முகாம் அமைத்து இருக்கிறீர்கள்? அப்படியென்றால் இங்கு கடற்படை இருக்கத் தேவையே இல்லையே. என்ன தேவைக்காக வடக்கு கிழக்கில் வைத்திருக்கிறீர்கள்? இந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்க முடியாமல் முழுமையாக கடற்கரைகளை கடற்படையினர் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலையிலும் பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால், எதற்காக கடற்படையினரை இங்கு வைத்திருக்கிறீர்கள்? இதற்கு காரணம் – ஒருபக்கம் தமிழ் மக்களின் காணிகளைப் பறித்து, இருக்க முடியாத சூழலை உருவாக்கி, வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு அவர்களுக்கு நிலைமையை ஏற்படுத்தி, தமது தொழிலையும், காணிகளையும் விட்டு **(6ஆம் பக்கம் பார்க்க...)**

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சலுகைகள் வழங்கப்படக்கூடாது என்று வலியுறுத்தியும், நாட்டின் வங்குரோத்து நிலையால் பாதிக்கப்பட்ட 220 லட்சம் பேருக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என வற்புறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இணைந்து நேற்று கொழும்பு – புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகப் பொதுமக்கள் கையெழுத்துத் திரட்டும் பணியை ஆரம்பித்தன.

இது தப்பில்லை. அரசியல் பிரசாரம். கிடைத்த சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்த வேண்டியதுதான்.

ஆனால் இதே காரணத்தை வைத்து உயர்நீதிமன்றத்தில் வழக்குக்குப் போடுவது குறித்தும், எதிர்க்கட்சிகள் தரப்பில் தீவிரமாகப் பேச்சடிபடுவதாகத் தெரிகிறது.

நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு செல்லக் காரணமாக இருந்தவர்கள் என உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட ராஜபக்ஷ சகோதரர்களுக்கும், அவர்களது குழாத்தினருக்கும் எதிராக மக்கள் சார்பில் நஷ்ட ஈடு கோரி புதிய வழக்கொன்றைத் தாக்கல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எதிரணி தரப்பில் வலுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சட்ட வட்டாரங்களை போட்டு தொல்லை பண்ணி வருகின்றன எதிர்க்கட்சித் தரப்புகள். எவ்வளவு பணம் செலவழிந்தாலும் பரவாயில்லை, வழக்கை நடத்துங்கள் என்று அழுத்தம் எனக் கேள்வி.

ஏற்கனவே முடிவுற்ற வழக்கில், நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்கு ராஜபக்ஷக்களின் செயற்பாடுகளும் பங்களித்தன என்று குறிப்பிட்ட உயர்நீதிமன்றம், அதற்கான தண்டனைத் தீர்ப்பையோ அல்லது நஷ்ட ஈடு வழங்கும் உத்தரவையோ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழங்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் புதிதாக வழக்கு போட்டு, வழக்குத் தொடுக்கும் பிரஜைக்கு நஷ்ட ஈடு செலுத்தும் உத்தரவு எதையும் உயர்நீதிமன்றம் வழங்க மறுத்துவிட்டால், அது ராஜபக்ஷக்களுக்குச் சாதகமாகிவிடும். தற்போதைய தீர்ப்பால் அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்துள்ள மக்களின் அரசியல் உணர்வெழுச்சியும் பொசுக்கென்று அடங்கிப் போய், ராஜபக்ஷக்களுக்கு சாதகமான அரசியல் நிலைமை ஏற்பட்டு விடும் என்று சட்டத் தரப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

அப்படி இருந்தும் 'ரிஸ்க்' எடுத்து வழக்கு போட வேண்டும் என்று எதிர்த் தரப்பில் சிலர் அடம் பிடிப்பதால், பொருளாதார நெருக்கடி சமயத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்காக கியூவில் நின்ற சமயம் மயங்கி விழுந்து இறந்த யாரேனும் ஒருவரின் நெருங்கிய உறவினரைப் பிடித்து வாருங்கள், அவர்களை மனுதாரராகக் கொண்டு வழக்குப் போடலாம் என்று மூத்த சட்ட வட்டாரங்கள் ஆலோசனை கூறியிருப்பதாகக் கேள்வி.

ஜனாதிபதி பதவியை விட்டு இறங்கிய பின்னர் மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்திற்கு அலைந்து பட்ட துன்பம் போல, மஹிந்த – கோட்டா அண்ணன் தம்பியருக்கும், பஸிலுக்கும் நிலைமை காத்திருப்பதாகதான் எனக்குத் தோன்றுகின்றது.

## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் ப்ககத் தொடர்ச்சி...)

பகுதியளவிலும் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்கத் தகடுகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை மொத்தமாக 26 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இன்று விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்ற சோதனை நடைபெறவுள்ளது.

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழு நிலை விவாதத்தில் ரவூப் ஹக்கீம் எம்.பி. காஸா தொடர்பாக ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எமது தொழிலாளர்களை நீண்ட காலமாக அனுப்பி வருகின்றோம்.

அதன் பிரகாரம் தொழில் அமைச்சர் அடுத்த கட்டமாக இஸ்ரேலுக்குத் தொழிலுக்கு அனுப்ப ஒப்பந்தம் செய்திருக்கின்றார். இஸ்ரேலுக்குத் தொழிலுக்குச் செல்ல தற்போது 10 ஆயிரம் பேர் தயாராக இருக்கின்றார்கள் என நான் நினைக்கவில்லை.

யுத்தம் இடம்பெறும் நாட்டுக்குச் செல்ல யாரும் விரும்பமாட்டார்கள். எனினும், தற்போதைய நிலையில் இஸ்ரேலுக்குச் செல்வது எந்தளவு பொருத்தம் எனத் தெரியாது. இது தொடர்பாக நான் தொழில் அமைச்சரிடம் வினவுகின்றேன்.

அத்துடன் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. காஸா மீது இஸ்ரேலின் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றோம்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலையும் நாங்கள் கண்டித்திருந்தோம். இதற்குத் தீர்வு காஸா மீது தாக்குதல் மேற்கொள்வதல்ல.

பலஸ்தீன அதிகார சபை ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பாக பலரும் கதைத்து வருகின்றனர். அமெரிக்காவும் பேசி இருந்தது. அதகார சபை ஊடாகத் தீர்வு காண முடியும் என நான் நினைக்கவில்லை.

அரசியல் தீர்வு இல்லாமையே இதற்குக் காரணமாகும். அதனால் அரசியல் தீர்வொன்றை வழங்குவதன் மூலமே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

அத்துடன் இலங்கையிலும் நாங்கள் வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்யவுள்ளோம். ஏனெனில் வடக்கில் சிறந்த பொருளாதாரம் இருக்கின்றது. குறிப்பாக பசுமைப் பொருளாதாரம், எரிசக்தி தொடர்பான பொருளாதாரம் போன்ற பல வளங்கள் அங்கு இருக்கின்றன.

அதனால் அடுத்த தசாப்தத்தில் வடக்கில் பலமான பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது இலக்காகும்.

எனவே,காஸாதொடர்பில்எமதுநிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. அது தொடர்பாக ரவூப் ஹக்கீம் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை." – என்றார்.

## நால்வர் பரிதாபச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மின்னல் தாக்கத்தால் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளையில் இரு யுவதிகளும், பேராதனையில் நபர் ஒருவரும் மண்சரிவால் உயிரிழந்துள்ளனர். களுத்துறையில் சிறுவன் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஒரு வீடு முழுமையாகவும், 37 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பாதுகாப்பு அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவேற்றப்பட்டது.

குழு நிலை விவாதத்தின் பின்னர் மாலை 6.00 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த செலவுத் தலைப்புக்கு வாக்கெடுப்பைக் கோரினார்.

இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அந்தச் செலவுத் தலைப்புக்கான ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 76 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

## யுத்தம் இல்லாத...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடங்களுக்கு போவதற்குரிய நிலையை திட்டமிட்டு உருவாக்குவதும், அதேநேரம் – வெளியிடங்களில் இருந்து அத்துமீறி வருபவர்களையும் அனுப்பி தொடர்ந்தும் தொழில் செய்ய முயற்சிக்கின்ற தமிழ் மக்களின் சொத்துக்களையும், உபகரணங்களையும் அழித்து அவர்கள் கடற்தொழில் செய்யமுடியாத நிலைமையையும் ஏற்படுத்துவது தான் உங்களின் நோக்கமாக இருக்கிறது.

இதேபோல் – வர்த்தகத்தை எடுத்துக் கொண்டாலும் – சிகை அலங்கரிப்பு நிலையங்கள், மரக்கறி விற்பனைகள், உணவு விடுதிகள், வியாபாராம் அனைத்திலும் போட்டியிடுகிறீர்கள். ஒரு அரசு தனது கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய முப்படைகளுக்கும் பாரிய நிதி ஒதுக்கி அந்த நிதியூடாக செயற்படுத்துகின்ற தன்மையோடு பொதுமக்களால் போட்டியிட முடியுமா? பொதுமக்களால் அது முடியாது. இன்று கட்டுமானப் பணிகளைக் கூட அரசு தரப்பு, இராணுவத்திடம் கொடுக்கும் நிலையே இருக்கிறது. அப்படியானால் – பொதுமக்களின் நிலை என்ன? ஆகவே சகல வகைகளிலும் மக்களை நசுக்கி – தங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடியாத நிலைமைகளை உருவாக்கி – அந்த மக்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றுவது தான் உங்களின் உண்மையான நோக்கமாக இருக்கிறது. போனவருடமும் நான் குறிப்பிட்ட அதே விடயத்தையே நான் இம்முறையும் குறிப்பிடுகின்றேன்.

இது உங்களை கோபப்படுத்துவதற்குரிய விடயமல்ல. ஆனால் இந்தக் கோணத்தில் மக்கள் இதனைப் பார்த்து விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனைகூறுகின்றேன். இலங்கை அரசின் ஒட்டு மொத்த கட்டுமானங்களில், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக தமிழ் மக்கள் தனத்துவமான வெறுப்பினை வைத்திருக்கிறார்கள். அதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அமைச்சினுடைய செயற்பாடுகளால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களின் கௌரவத்தைப் பறித்து, அவர்களின் அடையாளங்களை அழித்து செயற்படுகின்ற உங்களின் இனவாத செயற்பாடுகள் தொடர்ந்தும் இருக்கும் நிலையில், தமிழ் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக இருக்கக்கூடிய ஒரேவழி, முழுமையான சர்வதேச குற்றவியல் விசாரணையேயாகும். சர்வதேச குற்றவியல் விசாரணையை நடத்துவதன் ஊடாகவும் குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை வழங்குவதூடாகவும் மட்டுமே அது அமையும். இதனாலேயே தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராகவே நாம் வாக்களித்து வருகின்றோம். தொடர்ந்தும் எமது தமிழ் மக்களின் நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் ஒரு சர்வதேச பொறுப்புக்கூறலை நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்திக்கொண்டே இருப்போம்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சாத்தான் ஓதும் வேதம்

“யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நாட்டில் இன்னமும் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களினால்தான் இந்த நாடு முப்பது வருட கால யுத்தத்தை எதிர்கொண்டது”

- இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் தத்துவம் பேசியிருக்கின்றார் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின) தலைவர் அனுர குமார திஸநாயக்க.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்த உரை சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது. உருத்திராட்சப் பூனையின் நடிப்புக்குச் சமமானது.

2001 டிசம்பர் பொதுத் தேர்தலை அடுத்து அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. தேசிய நல்லிணக்கத்தின் அடிப்படையில் புரிந்துணர்வுடன் தீர்வு ஒன்றை காண்பதற்காக இரு தரப்பினரும் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காணும் திட்டத்திற்கு ரணிலின் அரசுடன் இணங்கி வந்தனர்.

அந்தச் சமயத்தில் இனவாதம் பேசி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சேர்ந்து, அந்தச் சமரச முயற்சிகளை முன்னின்று குழப்பிய பிரதான தீய சக்தி இந்த ஜே.வி.பிதான்.

ரணிலின் அரசு - புலிகள் பேச்சு மூலம் இணக்கத்தீர்வு ஏற்படுவதற்கு கிடைத்த அருமையான வாய்ப்பை பேரினவாதத்தைக் கிளப்பி, சந்திரிகாவைத் தூண்டி, ரணிலின் அரசை நேரத்துடன் கலைக்கச் செய்து, தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் - நல்லிணக்க அடிப்படையில் - தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பத்தைக் குழப்பி அடித்ததே இந்த ஜே.வி.பிதான்.

அந்தப் பேரினவாதப் பிரச்சாரத்தால் 2004 இல் பொதுத் தேர்தலில் சந்திரிகா தரப்புடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு, 39 ஆசனங்களைப் பெற்று, அமைச்சர் பதவிகளையும் ஈட்டி, ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தது இந்த ஜே.வி.பிதான்.

அதுவே இப்போது ‘ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பைத் தக்க வைப்பதற்கு இனவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்’ எனக் குற்றம் சுமத்துவது, வியப்பிலும் வியப்பு.

தமிழர் தாயகமான வடக்கும் கிழக்கும் 1988 முதல் ஒரே மாகாணமாக ஒன்றிணைக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்தது. இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை அடுத்து, ஒன்றிணைந்திருந்த தமிழர் தாயகத்தை, 2006 இல் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு வடக்கு - கிழக்கு இணைப்பைப் பிரிக்க வைத்ததே இந்த ஜே.வி.பிதான்.

இப்போதும் கூட, தமிழர் தாயகத்தை வழக்குப்போட்டுப் பிரித்து சிங்களவர்களுக்காக வரலாற்றுச் சாதனை படைத்தவர்கள் தாங்கள்தான் என்று தென்னிலங்கையில் அவ்வப்போது விடயங்களை அவிழ்த்து விடுவதற்கு ஜே.வி.பியினர் தயங்கியவர்கள் அல்லர்.

அப்படி இருக்கையில் தமது பழைய செயற்பாடுகள், நடவடிக்கைகள் என்பவற்றை எல்லாம் மறந்து, தேசிய நல்லிணக்கம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, சமரசத் தீர்வு போன்றவை பற்றி எல்லாம் அவர்கள் அவ்வப்போது தத்துவம் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதுதான்.

# சம்பூரின் ஆலங்குளத்தில் நினைவேந்தலுக்குத் தடை

சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு 17 பேருக்கு மட்டும் மூதூர் நீதிவான் நீதிமன்றினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் சம்பூர் பொலிஸாரினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கமைய இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை வழங்குவதற்காக இநேற்றைய தினம் சம்பூர் பொலிஸார் துயிலுமில்லத்துக்கு வருகைதந்து அந்தத் தடையுத்தரவுகளை வழங்க முற்பட்டபோது தடையுத்தரவில் குறிப்பிடப்பட்ட பெயர்களில் தவறாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தம்முடைய பெயர்களை அடையாளப்படுத்தக்கூடிய தரவுகள் எவையும் இல்லாமையினால் பலர் அதனை ஏற்க மறுத்தனர்.

இந்தத் தடையுத்தரவுக்கு எதிராக மேல்நீதிமன்றில் மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகவும் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் க.பண்பரசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இந்தத் தடையுத்தரவு உடைக்கப்படும் எனவும், தடையுத்தரவினால் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு எவ்வித மான பாதிப்புக்களும் ஏற்படாது என்பதனால் யாரும் குழப்பமடையவோ அச்சமடையவோ தேவையில்லை எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் ,ருகக் வேண்டும்.”

- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி



# மீனவர் பிரச்சினை இராஜதந்திர மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்கின்றார் டக்ளஸ்

இந்திய மீன்பிடி படகுகள் சட்ட விரோதமாக நாட்டின் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் பிரச்சினை இராஜதந்திர மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டும் எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கடற்றொழில் அலுவல்கள் அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சுசார் ஆலோசனை குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானமாக இந்திய மீனவ படகுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க கடற்படையின் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பிலும் இங்கு கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கடற்படை அதிகாரிகள், வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய கைதுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சட்டவிரோதமாக நுழையும் இந்திய மீனவ படகுகளின் எண்ணிக்கை சற்றுக் குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.



தென்னிந்திய அரசியல்வாதிகளுடன் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடி இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனவும், அதற்காக இனம், பிரதேசம் மற்றும் கட்சி என்ற பேதமின்றி அந்தந்தப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் எனவும் கடற்படை அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீனவர்களுக்கான கல்முனை வானொலி மத்திய நிலையத்தை மீள அமைக்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

# யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகளாகியும் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தவில்லை

## அனுர குமார திஸாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



"யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நாட்டில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பு உறுப்பினரது மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்."

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

"இலங்கை பல்லின சமூகம். தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கம் உறுதி செய்யப்பட்டால்தான் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இனவாத கருத்துக்களின் வெளிப்பாடுகளினால் தான் 30 வருட கால யுத்தம் தோற்றுவிக்கப்பட்டது.

ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களினால்தான் இந்த நாடு 30 வருட கால யுத்தத்தை எதிர்கொண்டது.

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இனங்களுக்குகிடையில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை.

வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பின் உறுப்பினரது மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்.

இவர்கள் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தை எதிர்பார்க்கவில்லை. இனவாதம் தோற்றம் பெறும் வகையில் தான் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள்.

இனவாதத்தை பரப்பி அதன் ஊடாக தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். வடக்கு மற்றும் தெற்கில் அரசியல் தீர்வுகளுக்கு முன்னர் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். எமது அரசியல் செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்தை நிலை நாட்டுவதாக அமையும்." – என்றார்.

# இலங்கையிலிருந்து விடுதலையான 15 மீனவர்கள் சென்னை விமான நிலையத்தை சென்றடைந்தனர்



இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட 15 இந்திய மீனவர்கள் சென்னை விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் நேற்று சென்னை விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அவர்கள், கடந்த செவ்வாய்க் கிழமை சிறையில் இருந்து விடுவிக் கப்பட்டனர்.

முன்னதாக, எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படை கடந்த 18 ஆம் திகதி கைது செய்தது. அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மீனவர்கள் குழு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து, மீனவர்களை விடுவிக்கக் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துரையாடியுள்ளார்.

இதனையடுத்து, இந்த மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மீன வர்களின் குடும்பத்தினரிடம் பேசிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிரதமர் மோடி தலைமையிலான அரசு தமிழர்களின் நலன்களுக்கு எப்போதும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்து வரும் விவகாரம் தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கருக்கு கடிதம் எழுதினார்.

அந்த கடிதத்தில், "தமிழக மீனவர்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடி தொழிலை மட்டுமே நம்பியுள் ளனர். அடிக்கடி அவர்கள் கைது செய்யப் படுவதால் மீனவர் சமூகம் பெரியளவில் பாதிக்கப்படுகிறது.

இலங்கை அரசின் இத்தகைய கைது நடவடிக்கைகள் மீனவர்கள் மத்தியில் அதிக மன அழுத்தத்தை உருவாக்கி வருகிறது. எனவே இலங்கை அரசின் இந்தப் போக்கை தடுத்து நிறுத்த வேண்டும்." என்று வலியுறுத்தி இருந்தார்.

# 'குஷ்பு மன்னிப்புக் கேட்க வேண்டும்': தமிழ்நாடு காங்கிரஸ் எச்சரிக்கை





"குஷ்புவின் தரக்குறைவான பேச்சால் பட்டியலின மக்கள் மனது புண்பட்டுப் போயிருக்கிறது. தமது தவறை திருத்திக் கொண்டு அந்தப் பதிவை உடனடியாக குஷ்பு நீக்க வேண்டும். அதோடு அவர் பொது மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையேல், லட்சக்கணக்கான பட் டியலின மக்களை திரட்டி மாபெரும் போராட்டத்தை நடத்த வேண்டிய சூழல் ஏற்படும்."

– இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டியின் பட்டியலினப் பிரிவுத் தலைவர் எம்.பி. ரஞ்சன்குமார் கூறி யுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த சில தினங்களுக்கு முன்பு நடிகை த்ரிஷா தொடர்பில் அவருடன் லியோ படத்தில் நடித்த நடிகர் மன்சூர் அலிகான் அநாகரிகமான கருத்துகளை தெரிவித்திருந்தார். இதற்கு தென்னிந்திய நடிகர் சங்கமும் தேசிய மகளிர் ஆணையமும் தனது எதிர்ப்பை தெரிவித்தன. இந்த நிலையில், எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் இணையவாசி ஒருவர் குஷ்புவிடம் சரமாரியாக கேள்வி கேட்டு பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதில் எக்ஸ் பக்கத்தில் பதில் அளித்த குஷ்பு, 'தி.மு.க. குண்டர்கள் இப்படித்தான் தவறான மொழியைப் பயன்படுத்துகிறார்கள். இதுதான் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. ஒரு பெண்ணை அவமதிக்கவும், மன்னிக் கவும் உங்களது சேரி மொழியில் பேச முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

சேரி மொழி என்று பேசி பட்டிய லின மக்களை நேரடியாக குஷ்பு அவமதித் துள்ளார். பாரதிய ஜனதா கட்சியினருக்கே உரித்தான சாதிய மனோபாவத்தை விஷமாக கக்கியிருக்கிறார் குஷ்பு. தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் என்ற எலும்புத்துண்டுக்காக எப்படி வேண்டுமானால் பேசலாம் என்று நினைக்கிறாரா குஷ்பு. நீட் தேர்வால் அனிதா தற்கொலை செய்து கொண்ட போது இந்த குஷ்பு எங்கே போயிருந்தார்? பா.ஜ.கவின் கே.டி.ராகவன் என்ற தலைவர் ஒரு பெண்ணுடன் ஆபாசமாக பேசிய போது இந்த குஷ்பு எங்கே போயிருந்தார்? பாஜகவில் மகளிர் நிர்வாகிகள் பாலியல் தாக்குதலுக்கு ஆளானபோது இந்த குஷ்பு எங்கே போயிருந்தார்? மணிப்பூரில் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப் பட்ட போது இந்த குஷ்பு எங்கே போயிரு ந்தார்? குஷ்புவுக்கு மகளிர் நலன் மீது எல்லாம் சிறிதளவும் அக்கறை கிடையாது. தன் பதவியை தக்க வைக்க வேண்டும் என்பது தான் குஷ்புவின் நோக்கம்." என்று தெரிவித்துள்ளார்.

# ஈராக்கிலுள்ள 2 ஹமாஸ் நிலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் தாக்குதல்



ஹிஸ்புல்லா அமைப்பினர் அமெரிக்க இராணுவ தளங்களை தாக்கிமைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈராக்கிலுள்ள இரண்டு ஹமாஸ் நிலைகள் மீது போர் விமானங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என அமெரிக்கா கூறியுள்ளது.

காசா போரின் எதிரொலியாக, மேற்கு ஆசிய பகுதிகளில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, ஈராக்கில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் அமெரிக்க இராணுவ நிலையங்கள் மீது முதல்முறையாக குறுகிய தொலைவு 'பலிஸ்டிக்' வகை ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடியாக, அல் அன்பார் மற்றும் ஜு்ஃப் அல் சாக்கர் பகுதிகளுக்கு அருகே உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் செயல்பாட்டு மையங்கள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ நிலையங்கள் மீது கடந்த மாதம் 17-ஆம் திகதியிலிருந்து இதுவரை 66 முறை ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலியில் கடலில் புலம்பெயர்ந்தோர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது



இத்தாலியின் லம்பேடுசா தீவில் புலம்பெயர்ந்தோர் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தின்போது 2 வயது குழந்தை ஒருவர் பலியாகியுள்ளதுடன் 8 பேர் காணாமல்போயுள்ளனர் என இத்தாலிய கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 40 புலம்பெயர்ந்தோர் இந்த படகிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என இத்தாலிய கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். இதேபோன்று மற்றொரு படகில் நடுக்கடலில் சிக்கி தவித்த 576 புலம்பெயர்ந்தோரும் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலியின் தெற்கே உள்ள லம்பேடுசா தீவு என்பது பல ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்தோர் பெருமளவில் வருகை தரும் இடம் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் இத்தாலி கடல் வழியாக புலம் பெயர்ந்துள்ளனர் என இத்தாலி உள்துறை அமைச்சக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வட ஆப்பிரிக்காவிலிருந்து இத்தாலி அல்லது மால்டாவிற்கு மத்தியதரைக் கடல் வழியாக கடந்து செல்வது உலகின் மிகவும் ஆபத்தான பயணம் என்பதுடன் இந்த வழியில் பயணித்தவர்களில் 2,200 பேர் காணாமல் போய் இருப்பதாக இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவுக்கான இ-விசா சேவைகள் மீண்டும் ஆரம்பம்

கனடா நாட்டவர்களுக்கு இ-விசா சேவைகளை மீண்டும் வழங்க இந்தியா முடிவு எடுத்திருக்கிறது என சர்வதேச ஊடகங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகி உள்ளன.

கடந்த செப்டம்பரில் இந்தியா மற்றும் கனடாவுக்கும் இடையே காலிஸ்தான் தீவிரவாதியின் கொலையை தொடர்ந்து ஏற்பட்ட இராஜதந்திர முரண்பாடுகள் காரணமாக கனடா நாட்டு மக்களுக்ளுக்கான விசா சேவையை செப்டம்பர் 21 அன்று இந்தியா நிறுத்தியது.

மேலும் தெரியவருகையில், கனடா குடிமக்களுக்கு கடந்த 2 மாதங்களாக இ-விசா வழங்குவது நிறுத்தப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சகம் கனடா குடிமக்களுக்கான மின்னணு விசா சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளது.

இந்திய பிரதமர் மோடி மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இடையிலான சந்திப்புக்கு முன்னர் இந்த விசா வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.



# கட்டுநாயக்க விமான நிலையத்தில் டிஜிட்டல் போக்குவரத்து முகாமை

கட்டுநாயக்க விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்து முகாமைத்துவ முறைமையானது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, விமான நிலையத்தில் பிரதான விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரம் மற்றும் ரேடார் செயற்பாட்டு மையம் ஆகியவை டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளன.

1.2 பில்லியன் ரூபா செலவில் இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தால், இந்த அதிநவீன அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இந்த டிஜிட்டல் விமானப் போக்குவரத்து முகாமைத்துவ முறைமை துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# பதுளை வரையான ரயில் சேவைகளை நானுஓயா வரை மட்டுப்படுத்த தீர்மானம்

மலையக மார்க்கத்தினூடாக பதுளை வரை போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து ரயில் சேவைகளும் நேற்று நானுஓயா வரை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பிரதி பொதுமுகாமையாளர் என்.ஜே.இதிபொல தெரிவித்துள்ளார்.

மலையக ரயில் மார்க்கத்தின் பல பகுதிகளிலும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று மேலும் சில பகுதிகளில் மண்சரிவு மற்றும் பாறைகள் விழும் அபாயம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.




# வதிரியில் ப.நோ.கூ. ச. கிளையில் புதனிரவு கூரை பிரித்துத் திருட்டு

வதிரி அரசடிப் பகுதியில் உள்ள ப.நோ.கூ. சங்கக் கிளை ஒன்று கூரை பிரித்து திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்துக்குரிய மேற்படி கிளையை புதன்கிழமை மாலை மூடி விட்டு சென்ற கிளை முகாமையாளர் நேற்று வியாழக்கிழமை காலை கிளையைத் திறக்க சென்றபோது சீட் கழட்டி திருடப்பட்டமை தெரிய வந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – முந்தல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கீரிமட்டாவ பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முந்தல் – அக்கர 60 கிராமத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் – கீரிமட்டாவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க, அங்கு வீதியோர மின்விளக்குகளை பொருந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இந்த இளைஞன் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞன் ஏணி ஒன்றின் மூலம் மின்சாரத் தூணில் ஏறி மின்குமிழை பொருத்திக் கொண்டிருந்த போது திடீரென மின்சாரம் தாக்கியுள்ளது.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் இளைஞனை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உரத்தின் விலை குறைகின்றது தேசிய உரச் செயலகம் தகவல்

சந்தையில் உரத்தின் விலை குறைவடைந்துள்ளது என தேசிய உரச் செயலகம் தெரிவித்துள்ளது.

தேவையானளவு உரம், நாட்டில் காணப்படுவதாக தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவா தெரிவித்துள்ளார்.

10,000 மெட்ரிக் தொன் யூரியா உரம், டிசம்பர் மாதத்திற்குள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளதாகவும் தற்போது 60,000 மெட்ரிக் தொன் உரம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் 15,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் கையிருப்பிலுள்ளது.

தனியார் துறையினரிடம் 60,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் காணப்படுவதாக தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவா தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 2000 மெட்ரிக் தொன் எஸ்.எஸ்.பி. உரம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.





# துயிலும் இல்ல துப்பரவுப் பணியில் ஈடுபட்டோரை அச்சுறுத்திய பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தாண்டியடி மற்றும் தரவை மாவீர் துயிலும் இல்லங்களில் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர் தரணி ஆகியவர்களை பொலிஸார் நேற்று வியாழக்கிழமை சேட்டை பிடித்து, துப்பரவு பணியை செய்யவிடாது அச்சுறத்தல் மேற்கொண்டனர் எனத் தெரிவித்து பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாவீரர் தினத்தையிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் ஆதரவுடன் மக்கள் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி மாவீர் துயிலும் இல்லத்தில் நேற்று துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு சென்ற வவுணதீவு பொலிஸார் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸைத் துப்பரவு பணியை மேற்கொள்ளவிடாது அச்சுறுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனால் அவர்கள் தொடர்ந்து துப்பரவுப் பணியைச் செய்யமுடியாது அங்கிருந்து வெளியேறினர். அதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தரவை மாவீர் துயிலும் இல்லத்தில் பொது மக்கள் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற வாழைச்சேனை பொலிஸார் அவர்களை அச்சுறுத்தியமையுடன் தரணி என்ற இளைஞனின் சேட்டை பிடித்து இழுத்து கையடக்க தொலைபேசியை பறித்து அச்சுறுத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது.

அச்சுறுத்தலுக்கு உள்ளான இருவரும் இச்சம்பவங்கள் குறித்து நீதி கோரி மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்ததுள்ளனர்.



# பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் 98 ஆவது அவதாரதின ஊர்வலம்

பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் 98 ஆவது அவதாரதினமாகிய நேற்று வியாழக்கிழமை காரைதீவு ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தால் ஒழுங்குங்கு செய்யப்பட்ட ஊர்வலம் காரைதீவின் தேரோடும் வீதி வழியாக இடம்பெற்றது.

அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை:-

**படங்கள்:வி.ரி.சகாதேவராஜா**



# இன்றைய ராசி பலன்கள் - 24.11.2023




உங்கள் மனதிலுள்ள எதிர்மறை எண்ணங்களை நீக்கி விடுங்கள். நீங்கள் உற்சாகமாகவும் நம்பிக்கையுடனும் இருந்தால் சாதகமான விளைவுகளைக் காணலாம்.

இறுக்கமான அதிகப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். சில ஆரோக்கியப் பிரச்சினை காரணமாக இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிக்க இயலாது.

உறவு நிலையில் குறிப்பாக உடன் பிறந்தோர்களுடனான உறவில் சில இடையூறுகள் காணப்படும். உறவில் மகிழ்ச்சி நிலவ உங்கள் உரையாடல்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பண வரவு குறைவாக இருக்கும். பணத்தை சாதுர்யமாக கையாள வேண்டும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் மனதில் மகிழ்ச்சி நிலவும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை முடிக்க திருப்தியான நேரம் உங்கள் கையில் உள்ளது.

தகவல் தொடர்பில் குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அதில் கவனம் தேவை. உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். என்றாலும் பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்ய இயலாது.

இன்று நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்தது.




இன்று நற்பலன்கள் கிடைக்கும். நீங்கள் அமைதியாகவும் சௌகரியமாகவும் உணரலாம். நம்பிக்கை உணர்வுகள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் எளிதாக மேற்கொள்ளலாம். இதனால் நற்பெயர் சம்பாதிக்கலாம்.

வீட்டில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும். இன்று காதல் விவகாரங்கள் சிறந்த பலனை அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று உங்களிடம் கவனம் அதிகமாக காணப்படும்.அதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு கொள்கையோடு செயல்படுவது உதவிகரமாக இருக்கும்.

பணியிடத்தில் மாற்றங்களுக்கான சாத்தியம் உள்ளது. நீங்கள் பயணம் மேற்கொள்வீர்கள். இதனால் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

உறவில் இணக்கம் குறைந்து காணப்படும். கருத்து வேறுபாடு காரணமாக பெரியவர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். தான தருமங்கள் செய்வதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதிகப் பணிகள் அமைதியின்மையும் தலைவலியையும் ஏற்படுத்தும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

இன்று பணிகள் சிறப்பானதாக காணப்படாது. உங்கள் மேலதிகாரிகளுடன் சில மோதல்கள் காணப்படும். பணியில் கவனக் குறைவு காணப்படும்.

உறவுமுறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் துணையுடன் சகஜமான சூழ்நிலை ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் அதிகமாக சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம்.




நீங்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டால் இன்று உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

பணியிடச் சூழல் பொதுவாக சிறப்பாக இருக்கும். என்றாலும் நீங்கள் சில சவாலான சூழல்களை சந்திக்க நேரும். அதில் நீங்கள் மூழ்கியிருப்பீர்கள்.

இன்றைய நாள் சிறப்பாக அமைய குடும்பத்தில் நல்லிணக்கம் இருக்க வேண்டியது அவசியம். உறவில் மகிழ்ச்சி நிலவ சில விஷயங்களில் அனுசரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். என்றாலும் பணப் பரிவர்த்தனைகளை கவனமாகக் கையாளவும்.

சிறிது ஓய்வெடுப்பதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்களின் அனுசரணையான அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் உறவினர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் நல்லுறவு காணப்படும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். பல வாய்ப்புகள் காணப்படும். சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

பெரியவர்களுடனான உறவு சிறப்பாக இருக்கும். அவர்களின் ஆதரவு உங்களுக்கு வழி காட்டும்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும்.அதிக பணம் சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் துணையின் ஆரோக்கியத்திற்காக இன்று பணம் செலவு செய்ய நேரலாம்.




குடும்பத்தின் வளர்ச்சிக்கான செயல்களை தொடங்க உகந்த நாள். இன்று நீங்கள் நன்மையான பலன்கள் காண புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டும்.

உங்கள் திறமைகளை சிறப்பாக பயன்படுத்தி நீங்கள் உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெரியவர்களுடனான உறவு சிறப்பாக இருக்கும். அவர்கள் ஆதரவாக இருப்பார்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உறவை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

சில தடைகளை சந்தித்த பின் நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சிறிய அளவில் கடன் வாங்க முயற்சி செய்யலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.11.2023




இன்று வளர்ச்சி காண்பதற்கு உங்கள் ஆற்றலை முழுவதுமாக பயன்படுத்துங்கள். உங்கள் தன்னம்பிக்கையை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் நல்லுறவு பராமரிப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது நீங்கள் பதட்டமாக காணப்படுவீர்கள். நேரத்தை நிர்வகிப்பதன் மூலம் எல்லாப் பணிகளையும் குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று வீட்டில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் நேரலாம். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும்.

பூர்வீகச் சொத்து மற்றும் பங்கு வர்த்தகம் மூலம் இன்று பண வரவு ஏற்பட வாய்புள்ளது. இதனால் நிதி நிலைமை மகிழ்சிகரமாக காணப்படும்.




குடும்பத்தினரின் நலன் குறித்த எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இதற்காக உங்கள் நேரத்தின் ஒரு பகுதியை இதற்கு ஒதுக்குவீர்கள்.

இன்று பதட்டம் நிறைந்து காணப்படும். இதனால் கவனமின்மை காணப்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

மற்றவர்களை அரவணைத்து செல்லும் அணுகுமுறை மூலம் உறவு வலுப்படும்.

இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிக்க இயலும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சூடு சம்பந்தமான பிரச்சினைகள் உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் புத்திசாலித் தனத்தை நீங்கள் நன்கு பயன்படுத்தினால் நீங்கள் அதிகம் சாதிக்கலாம். சுய முன்னேற்றத்திற்கான முயற்சி மேற்கொள்ளுங்கள்.

இன்று உங்கள் பணியில் ஜொலிப்பீர்கள். லாபகரமான பலன்கள் கிடைக்கும் சாத்தியம் உள்ளது. இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும்.

குடும்பத்தில் திருப்தி காணப்படும். நீங்கள் மகிழ்ந்து மற்றவர்களையும் உற்சாகப் படுத்துவீர்கள். உங்கள் இனிமையான போக்கின் காரணமாக அனைவரும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். நிதிநிலையில் ஸ்திரத்தன்மை பராமரிக்க உகந்த நேரம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக்கும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனை உங்களுக்கு குழப்பத்தையே ஏற்படுத்தும். இந்தப் போக்கை தவிர்த்து அமைதியாக இருக்க முயலுங்கள்.

பணியில் பதட்டம் காணப்படும். பொறுமையும் நேர்மையும் வளர்ச்சியை உருவாக்கித் தரும்.

5குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். பொறுமையாக இருந்து அமைதியாக கையாள்வது அவசியம்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். நிதி நிலையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பது கடினமாக உணர்வீர்கள்..

உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்வது நல்லது.









# மர்ஹூம் அப்துல்லா ஜவாத் ஞாபகார்த்த கிரிக்கெட்:
# சம்பியனானது ஏறாவூர் யங்ஸ்ரார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடியில் இடம்பெற்ற மர்ஹூம் அப்துல் ஜவாத் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஏறாவூர் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

காத்தான்குடி விளையாட்டுக்கழகம் மர்ஹூம் அப்துல் ஜவாத் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தியது.

இதன் இறுதியாட்டம் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் சாய்ந்தமருது ஓ.ஜீ.விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்படுத்தாடிய சாய்ந்தமருது ஓ.ஜீ.விளையாட்டுக்கழகம் 20 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களைச் சேர்த்தது.



பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர் யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம், 19 ஓவர்களில் 122 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியீட்டியது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட காத்தான்குடி நகர சபைச் செயலாளர் எம்.ஆர்.எப்.றிப்கா வெற்றியீட்டிய கழகங்களுக்கு கிண்ணங்களை வழங்கினார்.





# ஓமானில் உள்ள இலங்கைப் பாடசாலையின் விளையாட்டு விழாவில் பங்கேற்ற தூதுவர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஓமானின் தலைநகரான மஸ்கட்டில் இலங்கைப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

மஸ்கட்டிலுள்ள சுல்தான் கபூஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில், ஓமானுக்கான இலங்கைத் தூதுவரும், கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழையமாணவருமான ஏ.எல்.சபறுல்லாகான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இல்ல விளையாட்டுப் போட்டியை சிறப்பித்தார்.



# தேசிய மட்ட கபடியில் கலக்கிய நிந்தவூர் அல்-அஷ்ரக் பாடசாலை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டியின் இரு பிரிவுகளில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

15 வயதுக்குட்பட்ட கபடி அணி முதலிடம் பெற்று தங்கப்பதக் கத்தைச் சுவீகரித்தது.

அதேவேளை, 18 வயதுக்குட்பட்ட கபடி அணி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கம் பெற்றுள் ளது.

கபடி போட்டிகள் யாவும் கம்பஹாவில் கடந்த 17,18,19 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் ஏ.ஏ.கபூர் உள்ளிட்ட கல்விச் சமூகம், வெற்றியீட் டிய மாணவர்கள், கல்முனை கல்வி வலயம் சார்பாக பங்குபற்றிய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் கபடி அணியின் பிரதம பயிற்றுவிப் பாளராகக் கடமையாற்றிய சர்வதேச கபடி நடுவரும், இலங்கை கபடி சங்க நடுவரும், அம்பாறை மாவட்ட கபடி சங்க செயலாளரும், பயிற்றுவிப்பாள ருமான ஆசிரியர் எஸ்.முஹம்மட் இஸ் மத், அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை யின் கபடி அணியின் பொறுப்பாசிரியர் ஏ.ஹலீம் அஹமத், பிரதி பயிற்று விப்பாளராகக் கடமையாற்றிய கபடி வீரர், இலங்கை கபடி அணித்தலை வர் எம்.ரீ.அஸ்லம் சஜா, போட்டிக்கு அழைத்துச் சென்று வழிநடத்திய மதீனா பாடசாலை விளையாட்டு பயிற்று விப்பாளர் என்.முஹம்மட் நிப்ராஸ், நிந்தவூர் விளையாட்டு மற்றும் சமூக சேவைகள் அமைப்பு மற்றும் வீரர்க ளின் பெற்றோர்கள் ஆகியோருக்கு வாழ்த்துக்களையும்பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.





# சர்வதேச கராத்தேயில் சாதித்த கிழக்கு மாகாண மாணவர்கள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

10ஆவது ஜே.எஸ்.கே.ஏ. திறந்த சர்வ தேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டி யில் கிழக்கு மாகாண மாணவர்கள் ஐவர் பங்கேற்று, நான்கு தங்கப்பதக்கங்கள், 7 வெள்ளிப்பதக்கங்கள் உள்ளடங்கலாக 11 பதக்கங்களை சுவீகரித்தனர்.

பண்டாரகம உள்ளக அரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில், எம்.எச். அபான் அஹமட் 2 தங்கப்பதக்கங் களையும் 2 வெள்ளிப்பதக்கங்களை யும் வென்றார்.

அதேபோல, ஜே.அஹமட் சுமைத், ஏ.எல்.முஹமட் அப்ரி ஆகியோர் தலா ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றனர்.

ஏ.அஹமட் சிஹாப் 2 வெள்ளிப் பதக்கங்களையும் ஏ.அஹமட் ஹம் தான் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை கல் முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி உடற் கல்வித்துறை ஆசிரியர் சென்ஸி யூ.எல். எம்.இப்றாஹிம் வழங்கியிருந்தார்.



# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்கள் மாத்திரம் காரணம் அல்லர்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பொருளாதார வீழ்ச்சிக்கு வழி வகுத்த தீர்மானங்களை மேற்கொண்ட பொறுப்பை முழுமையாக ராஜபக்ஷக்கள் மீது சுமத்த முடியாது எனவும், அந்தப் பொறுப்பின் ஒரு பகுதியே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் பிரஸ்ட்போஸ்ட் ஊடக வலையமைப்பிற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன பிளவுபட்டுள்ளதாகவும், ஒரு பகுதியினர் தம்முடனும் மற்றொரு பகுதியினர் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் உள்ளனர் என்றும் இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. ராஜபக்ஷக்களுக்கு மாற்றீடாக அவர் செயற்படுகின்றார் என விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதாகவும் ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தாம் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாழ்த்து தெரிவிப்பவர் எனவும், தமது பிறந்தநாளுக்கும் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவிப்பார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிடமிருந்து ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் எவையும் விடுக்கப்படுகின்றனவா எனவும் இந்த நேர்காணலில் கேள்வி எழுப்பப்பட்டது.

கட்சியினருக்குத் தேவையான தருணத்தில் தம்மை வந்து சந்திப்பார்கள் என ஜனாதிபதி இதற்குப் பதில் வழங்கியுள்ளார்.

அண்மையில் பொருளாதார நெருக்கடி தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்தும் ஜனாதிபதியிடம் கேள்வி முன்வைக்கப்பட்டது.

குறைந்த பட்சம் இந்தக் குற்றங்களுக்கான தண்டனை ஏதும் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படவில்லையே எனவும் இதன்போது வினவப்பட்டது.

இதற்கு பதில் அளித்த ஜனாதிபதி,

“ராஜபக்ஷக்களின் காலப்பகுதியிலேயே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதும், ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரின் பக்கம் திரும்பினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தது. ஆனால், அவர் பொறுப்பேற்க மறுத்துவிட்டார்.

ஒட்டுமொத்த அரசுக் கட்டமைப்பே தகர்ந்தது. எவரும் பொறுப்பை ஏற்க முன்வரவில்லை. கால அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்கும் தாமதமானது. ஜூலை மாதம் ஜனாதிபதி பதவி விலகிய சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சி பொறுப்பேற்கவில்லை. பெரும்பாலானோர் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டனர். அது தொடர்பிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். அதனை விடுத்து, ஒரு பகுதியில் மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது – என்றார் ஜ்ச்னாதிபதி.

எவ்வாறாயினும், நாடு வங்குரோத்து அடைந்ததில் ராஜபக்ஷக்களுக்கும் பொறுப்பு உள்ளது. இந்த விடயத்தில் அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளனர். அந்தக் காலப்பகுதியில் வாக்குறுதிகளை வழங்கி, மக்களை மகிழ்வித்து, அரசியல் செய்யப் பலர் பழகிக்கொண்டனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



# வீரவன்சவுக்கு எதிரான வழக்கு ஒத்தி வைப்பு

காலாவதியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீர்கொழும்பு பிரதான நீதிவான் அமில ஆரியசேன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.






# அலெக்ஸின் சாவுக்கு நீதி கிடைக்குமா?



**(நடராசா லோகதயாளன்)**

நீதிமன்றத்துக்கு மேலதிகமாக பொலிஸாரின் இரு விசேட அணிகள், மனித உரிமை ஆணைக் குழு மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் தற்போது துருவித் துருவி ஆராயும் விடயமாக சித்தன்கேணி இளைஞன் நாகராசா அலெக்ஸ ின் மரணம் மாறியுள்ளது.

இச்சம்பவம் குறித்து விசாரித்ததில் கிடைத்த தகவல்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

சித்தன்கேணி வழக்கம்பரைப் பகுதியில் ஒரு வீட்டில் 16 பவுண் நகை மற்றும் 90 ஆயிரம் ரூபா பணம் ஆகியன களவுபோன விடயத்தில் சந்தேகத்தின் பெயரிலேயே இக்கைதுகள் இடம்பெற்றன என பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

முதலில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் கூறியதன் அடிப்படையில் பின்னர் அலெக்ஸ் கைது செய்யப்பட்டார் என்றே கூறப்படுகின்றது.

அதாவது 2023-11-08 ஆம் திகதி நா. அலெக்ஸ் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் அல்லாத ஒரு தனியான இடத்தில் மற்றவருடன் சேர்த்துத் தடுத்து வைக்கப்பட்டிருந்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

பொலிஸ் நிலையத்திற்கு அருகே உள்ள ஒரு வளவில் நீர்த்தொட்டியுடன் கூடியதான அறை ஒன்றிலேயே அவ்வாறு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனப்படுகின்றது. இங்கே 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கூறப்பட்டது. இதனிடையே அலெக்ஸ் தமது சகோதரனுடன் ஒரு தடவை தொலைபேசியில் உரையாட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளானோரை 2023-11-11 அன்றே தாங்கள் கைது செய்தனர் எனப் பொலிஸ் பதிவேட்டில் பதிவு செய்து 2023-11-12 ஆம் திகதி அன்று பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்துவதற்காக அவர்கள் முயன்றிருக்கின்றனர்.

முதலில் அதேதினமான 2023-11-12 ஆம் திகதி தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரியிடம் வட்டுக்கோட்டைப் பொலிஸார் இருவரையும் கொண்டு சென்றுள்ளனர். தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரி அச்சமயம் கோப்பாய் ஆஸ்பத்திரியில் கடமையில் இருந்தமையால் அங்கு கூட்டிச் சென்று காட்டியுள்ளனர்.

தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரி சந்தேக நபர் அல்ர்க்ஸின் உடலில் வெளித் தெரியும் காயத்தை குறிப்பிட்டு, வைத்தியசாலையில் அவரை

தொடர்ச்சி ▼



தொடர்ச்சி

அனுமதிக்குமாறு வழிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்பே பதில் நீதிவான் முன்னலையில் இருவரும் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிவான் இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமையுடன் அலக்ஸை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் கட்டளையிட்டுள்ளார்.

இதன்பெயரில் 2023-11-12 அன்றே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 28ஆம் விடுதியில் அலெக்ஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் மருத்துவரினால் கை நரம்புகள் சேதமடைந்துள்ளன என எழுதப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையில் 2023-11-12 அனுமதிக்கப்பட்ட நா.அலெக்ஸ் 2023-11-16 வரை போதனா வைத்தியசாலையில் சிகிச்சையில் இருந்து அதன் பின்பு விடுவித்ததன் பெயரில் சிறைச்சாலை அதிகாரிகள் அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ளனர்.

2023-11-16 அன்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறி சிறை சென்றவர் 2023-11-18 அன்று மாலையில் சிறையிலே தனக்கு இயாலாமல் உள்ளது என்ற தகவலை தெரிவித்த போது சிறைச்சாலை மருத்துவர் பார்வையிட்டுள்ளார்.

2013-11-19 ஆம் திகதி காலை சிறைச்சாலையில் நோய் அதிகரித்ததன் காரணமாக மீண்டும் போதனா வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்றனர் எனக் கூறப்பட்டது. இருந்தபோதும் வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கும் போது அவரது உடலில் இருந்து உயிர் பிரிந்திருந்ததாக வைத்தியசாலைத் தரப்பு தெரிவிக்கின்றது.

இதனிடையே உயிரிழந்த அலெக்ஸும் அவருடன் இருந்த மற்றையவரும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் தடுப்பில் இருந்த சமயம் ஓர் ஆயுள்வேத வைத்தியரிடமும் அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் தற்போது கண்டறியப்படுகின்றது.

இதேபோன்று இருவரையும் 2023-11-08 ஆம் திகதி பொலிஸார் பிடித்துச் சென்றபோதும், 11 ஆம் திகதியே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள நிலையில், 2023-11-08 அன்றே அவர்களைப் பிடித்துச் சென்றமையை ஆதாரப்படுத்தும் சி.சி.ரி.வி. கமராவின் வீடியோ தற்போது இரு விசாரணைப் பிரிவினர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு என்பன வசம் தற்போது கிட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேநேரம் உயிரிழந்த இளைஞனின் உடலை உடற்கூறு ஆய்வு செய்த சட்ட வைத்திய நிபுணர் இது ஓர் இயற்கை மரணம் அல்ல என உடற்கூற்று ஆய்வு அறிக்கையில் எழுத்தில் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு உடற் பாகங்கள் மேலதிக ஆய்விற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இநத்தனை நிகழ்வின் மத்தியில்,அந்த இளைஞனைக் கொண்டு சென்று சித்திரவதை மேற்கொண்டதான குற்றச் சாட்டுடனும் 4 பொலிஸாரின் விவரங்கள் பிரஸ்தாபக்கப்படும் நிலையில் இளைஞனின் மரணம் கொலையென வழக்கிடப்படுமா,இல்லையா எனபதே தற்போதுள்ள கேள்வியாகவுள்ளதனால் நீதிமன்றின் இன்றைய இடைக்கால கட்டளை பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய வழக்கில் உயிரிழந்தவருக்காக யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாவர் என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய சட்டத்தரணிகள் அனைவருக்கும் இவ்வழக்கில் முன்னிலையாக அந்த அமைப்பு அழைப்பும் விடுத்துள்ளது. கொலைக்குக் காரணமானோரை உடன் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அழுத்தம் கொடுப்பதோடு, இந்த விடயத்தை புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.






## இந்தியாவின் வேட்டை

இருபது-20இல் இந்தியா துரத்தி வென்ற கூடுதலான ஓட்ட இலக்கு

| இலக்கு | ஓட்டம் | எதிரணி | மைதானம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 209 | 209-8 | ஆஸி. | விசாகப்பட்டிணம் | 2023 |
| 208 | 209-4 | மே.இ. | ஹைதராபாத் | 2019 |
| 207 | 211-4 | இலங்கை | மொஹாலி | 2009 |
| 204 | 204-4 | நியூஸி. | அக்லாந்து | 2020 |
| 202 | 202-4 | ஆஸி | ராஜ்கோட் | 2013 |

# விசாகப்பட்டிணத்தில் பரபரப்பு கடைசிப் பந்தில் இந்தியா வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இருபது-20 போட்டியில் பரபரப்புக்கு மத்தியில் கடைசிப் பந்தில் இந்தியாவெற்றிபெற்றது.

இந்தியா – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

உலகக் கிண்ணத் தொடர் முடிந்த கைகொடு நடக்கும் இந்தத் தொடரில் இரு அணிகளிலும் முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.

இதன் முதலாவது ஆட்டம் நேற்று விசாகப்பட்டிணத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடியஅவுஸ்திரேலியஅணி, ஜோஸ்இங்லிஸின் சதமும் (110), ஸ்ரீபன் ஸ்மித்தின் அரைச்சதமும் (52) கைகொடுக்க 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில், பிரசிட் கிறிஸ்னா, ரவி பிஸ்னோய் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் 209 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணி, அணித்தலைவர் சூர்ய குமார் (80), இஷான் கிஷான் (58) ஆகியோரின் அரைச்சதங்கள் கைகொடுக்க இலக்கு நோக்கி சிறப்பாக நகர்ந்தது.

எனினும், பின்வரிசை வீரர்கள் சொதப்ப, கடைசிப்பந்தில் ஓர் ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற நிலையில், பரபரப்புடன் ஓர் ஓட்டம் பெறப்பட இந்தியா 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதன்மூலம் அந்த அணி இரு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ஆட்ட நாயகனாக இந்தியாவின் சூர்யகுமார் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட தொடரில், இந்தியா 1:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

இரு அணிகளும் மோதும் இரண்டாவது போட்டி எதிர்வரும் எதிர்வரும் 26ஆம் திகதி திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ளது.